**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 5/2021.**
**அ.சா. 1 – திருமதி. சௌமியா ப்ரீத்தி.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.05.2026.

* * * * * * *

**(1–வது எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 B.N.S.S. –ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 2–வது எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அ.சா.1 மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, 1–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான், எந்த வழக்கிற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், என்னுடைய தாலிச் செயின் திருடுபோனது சம்பந்தமாக சாட்சியம் அளிக்கிறேன். 12.10.2018 ஆம் தேதியன்று நான், எனது தலைமை அலுவலகத்தில் மீட்டிங்கிற்காக காலை 09.45 மணிக்கு சிவாஜி நகர் 3–வது தெருவில் போகும் வழியில், நடந்து போய்க்கொண்டிருந்தேன். அப்போது, வண்டியில் வந்த 2 நபர்கள் கழுத்தில் சட்டென அடித்தனர். அவர்கள் கையில் செயின் மாட்டிக் கொண்டது. எனது கழுத்தில் இல்லை. இருசக்கர வாகனத்தில் பின்பக்கம் இருந்த நபர் என் கழுத்தில் அடித்தார். அவருக்கு எத்தனை வயது இருக்கும் என்றால், 25 வயதிலிருந்து 35 வயதிற்குளாக இருக்கலாம். பின்னால் அமர்ந்திருந்த நபர் சிவப்பு நிற டீ–சர்ட் போட்டிருந்தார். அவர் தலைமுடி வழுக்கையாக இருந்ததா? முடி இருந்ததா? என்றால், நான் பதற்றத்தில் கவனிக்கவில்லை. இருசக்கர வாகனம் பெரிய வண்டியா, சின்ன வண்டியா? என்றால், ஸ்கூட்டி இல்லை. சாதாரணமாக அனைவரும் ஓட்டும் வண்டியாகும்; கலர் தெரியவில்லை. வண்டியின் நபம்பரையும் நான் கவனிக்கவில்லை; பதற்றத்தில் நான் கவனிக்கவில்லை. காவல் நிலையத்தில் நான்தான் என் கைப்பட புகாரை எழுதிக்கொடுத்துள்ளேன். நான் இன்ஜினியரிங் படித்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் மனுச் செய்து எனது செயினைப் பெற்றுக்கொண்டேன். போலீசார் இன்னார் என்று அடையாளம்

காட்டிய நபரை நான் பார்த்தேன் என்றால், சரியல்ல. அங்கே அமர்ந்திருந்த நபர்களில் நான்தான், நான் பார்த்த நபரை அடையாளம் காண்பித்தேன். இருசக்கர வாகனத்தின் பின்பக்கமாகத்தான் என சொல்லியுள்ள நிலையில், போலீசார் கூறியதன்பேரில், நான் அடையாளம் காட்டியிருக்கிறேன் என்றாலும், நான் எதிரிகளைப் பார்க்க வாய்ப்பில்லை என்றாலும், சரியல். நான் அடையாளம் காட்டிய நபர்கள் எந்தக் குற்றச் செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும், போலீசார் எதிரிகள்மீது பொய் வழக்குப் புனைந்துள்ளனர் என்றாலும், சரில்ல. எனது செயினைப் பறித்தது, 1–வது எதிரியா? அல்லது 2–வது எதிரியா? எனத் தெரியாத நிலையில், அடையாளம் காட்டியதாகக் கூறுவது தவறு என்றால், சரியல்ல. சம்பவம் நடந்த இடத்தில் எத்தனை வீடுகள் இருந்தன என்றால், வீடுகள் இல்லை. சிவாஜி நகர் செல்வதற்கு 20 அல்லது 30 அடிக்கு முன்பாக சம்பவம் நடைபெற்றது என்றால், சரிதான். சிவாஜி நகர் அருகே கடைகள் மற்றும் வீடுகள் உள்ளன என்றாலும், போலீசார் கூறியதன்பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் சென்ற இடத்தில் கடைகள் இல்லை. நான் சென்றபோது, ஆள் நடமாட்டம் இல்லை. 1–வது எதிரி எனது செயினைப் பறிக்கவில்லை என்றாலும், 1–வது எதிரிக்கும் வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல. இவ்வழக்கானது போலீசார் ஜோடிக்கப்பட்டது என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.05.18 17:29:31 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**